# ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் பேச மாட்டார்... செயல்படுவார்!

இந்த ஆட்சிக்கு முட்டுக் கொடுப்பதோ, சப்பைக்கட்டு கட்டுவதோ என் நோக்கம் அல்ல... மாறாக இந்த ஆட்சிக்கு அது தேவைப்படவும் இல்லை..!

ஒரு ஆட்சி நிறுவப்படும் பொழுது அந்த ஆட்சியின் தலைவர் நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மை கொண்டவராக வும், மக்கள் நலன் மட்டுமே முதல் குறிக் கோளாகக் கொண்டு செயல்படுபவராக வும் இருக்கின்றாரா என்பதை மட்டுமே நாம் விமர்சனத்திற்கு உள்ளாக்க வேண் டும் அல்லது முடியுமே தவிர...

மக்கள் அனைவருமே மேற்கண்ட குணாதியசயங்களோடு இருப்பார்கள் அல் லது இருக்க வேண்டும் என்பது அறி யாமை அல்லது முட்டாள்தனம். மக்களில் நல்லவர்கள், கெட்டவர்கள், குதர்க்க வாதி கள், அறியாமையில் இருப்பவர்கள், மேன் மையான சிந்தனை கொண்டவர்கள்... இப்படியாக பல்வேறு குணாதிச யங்கள் கொண்டவர்களும் இருப்பார்கள்.

எந்த ஆட்சி... யாருடைய தலைமையில் அமைந்தாலும் அவரவர்களின் குணாதிச யங்கள் அப்படியே தான் தொடருமே தவிர.... பெரிய மாற்றம் எதுவும் இதுக் காது..!

இதோ இந்த வாரம் விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் நடந்த விஷச் சாராய சாவுகள் என்பது சட்ட விரோதமாக செயல்படும் ஈன புத்திக்கா ரர் களின் இழிசெயலால் நிகழ்ந்த கொடுமை...

இந்த செய்தி முதல்வரின் கவனத்திற்கு வரும் பொழுது... சாவு எண்ணிக்கை வெறும் மூன்று மட்டுமே... அந்த நேரத் தில் முதல்வர் இருந்தது ஒரு அரசு நிகழ்ச்சி மேடையில்... தகுதி வாய்ந்த 1500 இளை ஞர்களுக்கு நில அளவை துறையில் பணி நியமன ஆணைகளை அவர் வழங்கத் துவங்கியிருந்தார்...

அந்த நேரத்தில் தான் இந்த செய்தி அவ ருக்கு அவசரச் செய்தியாக சொல்லப்படுகி றது. தன்னுடைய மாநிலத்தில், இயற்கை அல்லது மனித செயலால்... ஏதோ ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டு மக்கள் பாதிப்ப டைந்து மாண்டுபோகும் சூழல் ஏற்பட் டால், தான் எந்த நிலையில் இருந்தாலும், எந்த இடத்தில் இருந்தாலும் அது தனக்கு உடனே தெரியப்படுத்தப்பட வேண்டும் என்ற உத்தரவு முதலமைச்சரால் வழங் கப்பட்டிருந்தால் மட்டுமே அதிகாரிகள் அந்த நேரத்தில்... விழுப்புரம் மரணச் செய்தியை அவரிடம் கூறியிருப்பார்கள்..!

**அப்படியே இங்கு கட் பண்ணி... செம்ப ரம்பாக்கம் ஏரி நிறைந்து அதை திறக்கும் நேரத்தில் நடந்த அவலத்தை கொஞ்சம் நினைவுக்கு கொண்டுவாருங்கள் விமர்ச**



**கர்களே... ஜெயலலிதா தூக்கத்தைக் கெடுக்கக் கூடாது என்ற ஒரே காரணத்திற் காக ஒட்டுமொத்த சென்னையையும் சுடு காடாக மாற்றிய ஜெயலலிதாவின் ஷோ கால்ட் அதிரடி ஆட்சி அது..!**

தூத்துக்குடிஸ்டெர்லைட் ஆலை விவகா ரத்தில்... அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எடப்பாடியின் கீழ் இருந்த காவல் துறையின் போலீஸார் 13 உயிர்களை தங் கள் கரங்களில் இருந்த துப்பாக்கியால் கேட்க நாதியற்ற ஒரு விலங்கை சுட்டுக் கொள்வது போல சுட்டுத்தள்ளிய நிகழ்வை... பேப்பரில் படித்துத் தான் தெரிந்து கொண்டேன் என்று எடப்பாடி எகத்தாளமாக பேசிய ஆட்சி அது..!

ஆனால் இன்றோ... திராவிட மாடல் ஆட் சியில் தலைவர், கொஞ்சம் கூட தாமதிக்க வில்லை... மூன்று உயிர்கள் போயிருக்கி றது... விஷச்சாராயத்தை குடிப்பவன் ஒன்றும் பணக்காரனாகவோ அல்லது நடுத்தர வர்க்கத்தினனாகவோ கூட இருக்க மாட்டான். மாறாக அவன் பொரு ளாதாரத்தில் மிக மிக அடித்தட்டு நிலையில் இருப்பவனாகத்தான் இருப்பான்... அவ னுடையதினசரிவருமானம்குடும்பத்திற்கு போகாவிட்டால்... அந்த குடும்பங்கள் நடுத் தெருவுக்கு வந்துவிடும்... செத்துப் போன வன் எப்படிப் போனான் என்று ஆராயா மல்... அவன் குடும்பத்தின் நிலையினை ஒரு கணம் கண் முன்னே நிறுத்தி... பத்து லட்சம் ரூபாய் நிவாரணத்தை அறிவித்து விட்டே தன் காரில் ஏறி விழுப்புரத்திற்கு வாகனத்தை விரட்டச் சொல்கிறார்...!

அங்கே சென்று இறந்தவர்கள் குடும் பத்தை பார்த்து ஆறுதல் சொல்கிறார்... மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோ ரைப் பார்த்து விரைந்து, தரமான சிகிச்சை அளித்திட மருத்துவ அதிகாரிகளுக்கு உத் தரவிடுகிறார்.

சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி களை உச்சக்கட்ட அலெர்ட்டில் முடுக்கி விடுகின்றார்... இரண்டு மாவட்ட எஸ்பிக் கள் கவனமாக இருந்திருந்தால் இது நடந் திருக்காது என்பதை விசாரித்து புரிந்த வராக, அந்த இருவரையும் உடனே பணி யிடை நீக்கம் செய்கிறார்.

எஸ்.பி. லெவலில் பணியிடை நீக்கம் என்பது அவர்கள் சர்வீஸில் மிக முக்கிய தருணங்களில் ஆகப்பெரும் தடையாக அமைந்து விடும். அதனால் மற்ற மாவட்ட எஸ்.பி.க்கள் அனைவரும் தங்கள் படை யோடு உள்ளங்கால் பிடறியில் அடிபடும் அளவிற்கு ஓடி ஆடி... தமிழ்நாடு முழுவ தும் கள்ளச்சாராய வேட்டையை துவங்கு கின்றனர்..!

அடுத்த இரண்டே நாட்க ளில்... 1558 பேர் கைது செய் யப் படுகிறார்கள். 1842 வழக் குகள் பதிவு செய்யப்படுகின் றன. 19028 லிட்டர் கைப் பற்றப் படுகிறது.

ஒரு அசம்பாவிதம் நடை பெற்ற பிறகு ஒரு தரமான முத லமைச்சரின் செயல்பாடுகள் இப்படித்தான் இருக்க வேண் டும்...



**சௌமியன் வைத்தியநாதன்**

மாறாக பேப்பரை படித்துத் தான் தன் போலீஸ்காரர்கள் 13 பேரை சுட்டுக் கொன்றதை தெரிந்து கொண்டேன் என்பதோ...

பொள்ளாச்சி பாலியல் கொடுமையில் 250 இளம்பெண்கள் பாதிக்கப்பட்ட செய்தி அறிந்தும், முக்கிய கட்சிக்காரரை இந்த நிமிடம் வரையிலும் காப்பாற்றிக் கொண் டிருக்கும் எடப்பாடி... அந்த போலீஸ் எஸ். பி.யை எதிர்க்கட்சிகளின் துணையோடு மக்கள் செய்த பல்வேறு போராட்டங்க ளுக்கு பிறகே இடமாற்றம் மட்டுமே செய்து மக்கள் விரோத ஆட்சியாளராக செயல் பட்ட எடப்பாடி பழனிச்சாமி...

தன்னுடைய அதிதீவிர ஆதரவாளரான கட்சிக்காரன் காய்ச்சி விற்ற கள்ளச்சாரா யத்தைக் குடித்துத் தான் 14 உயிர்கள் பலி யாகியிருக்கின்றது என்ற அடிப்படை அறிவு கூட இல்லாமல், தரம்மிக்க முதல மைச்சரை பதவி விலகச் சொல்வதும்... அதற்கு பாஜக உள்ளிட்ட கோத்ரா ரயில் எரிப்பு ஜாம்பவான்கள் ஒத்து ஊதுவதும்... அதற்கு இணையத்தில் நடுநிலை முகமூ டிகளோடு அலையும் சில சங்கிகள் ஆலா பனை செய்வதும்....

இந்த நாராசங்களை எல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கின் றார்கள்..!

**தங்கள் ஆட்சி அமைந்ததும், அம்மா உணவகத்தில் ஜெயலலிதா பேனரை கிழித்த தன் கட்சித் தொண்டனையே கைது செய்ததும்... தன் கட்சிக்காரர்கள் காவல் நிலையங்களிலோ, வேறு அலுவ லகங்களிலோ சென்று ஆளுமை செய்யக் கூடாது என்று கடும் உத்தரவு போட்டு அதை நடைமுறைபடுத்திக் கொண்டிருப்ப வரும்... இந்த முதலமைச்சர் தான்..!**

**தன் கட்சிக்காரர்களை இரண்டாண்டு காலம் கட்டுக்குள் வைத்திருந்து விட்டு... அரசு அதிகாரிகளுக்கு முழு சுதந்திரம் கொடுத்து செயல்பட அனுமதித்து விட்டு...**

**தங்கள் கட்சிக்காரர்களை கட்டுக்குள் வைத்திருப்பது போல... இன்றைக்கு அதி காரிகளை கட்டுக்குள் கொண்டு வந்திருக்கும் ஒப்பற்ற முதலமைச்சர்தான் எம்.கே.எஸ். அவர்கள்...!**

இவர் எடப்பாடி பழனிச்சா மிகளைப் போன்று தவறி ழைக்கும் கட்சிக்காரர்களை யும் காப்பாற்றவில்லை... அதற்கு துணை போன தால் தான் அசம்பாவிதம் நடந்தது என்று அதிகாரிகள் சாக்குப் போக்கு சொல்லும் நிலையையும் ஏற்படுத்த வில்லை...!

மாறாக இன்றைக்கு மக் களுக்கு எதிராக எந்த அசம் பாவிதம் நடந்தாலும் அதிகாரிகள் தான் பொறுப்பேற்க வேண்டும் என்ற நிலையை மிக மிகத் தெளிவாக உருவாக்கி... அரசு இயந்திரத்தை முழுமையாக ஓட வைக் கின்றார்..!

எடப்பாடி வகையறாக்களே சற்று தள்ளி நில்லுங்கள்.... இது மக்களுக்காக செயல் படும் ஆகச்சிறந்த முதலமைச்சரின் ஆட்சி. இங்கே மக்களுக்கு மட்டுமே மரியாதை என்பதை மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக புரிந்துகொள்ள துவங்கிவிட்டனர்.

**திராவிட மாடல் முதலமைச்சர் பேசமாட்டார்... செயல்படுவார்..!**




திருப்பூர் வடக்கு மாவட்டம், வடக்கு மாநகரம், அண்ணா காலனி பகுதி கழகத்தின் சார்பில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியின் 2ம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். இதில் மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகரச் செயலாளர் ந.தினேஷ்குமார், பகுதிச் செயலாளர்கள் மின்னல் அ.நாகராஜ், கொ.ராமதாஸ், மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், துணைச் செயலாளர் வழக்கறிஞர் சி.கே.நந்தினி, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.விஸ்வநாதன், க.பால்ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சரவணன் நம்பி, ப.குணராஜ், மாமன்ற உறுப்பினர் வே.ராதாகிருஷ்ணன், சிவபாலன், செ.திலகராஜ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல்லில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை மாநில அளவில் டேபிள் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.